Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, AUGUST 07, 2023

திங்கட்கிழமை ஒகஸ்ட் 07, 2023 | ஒளி: 09 கதிர் 056 | பக்கம்:06 | வடக்கு,கிழக்கு | FREE



## “திரவ உணவுகளை குடிக்க கொடுக்கவும்”

தற்போது நிலவும் வறண்ட காலநிலையால் குழந்தைகள் மத்தியில் பல்வேறு நோய்கள் பரவுவதாக மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

நீர்ச்சத்து குறைபாடு போன்ற நிலைமைகள் சர்வ சாதாரணமாக காணப்படுவதாகவும் எனவே, குழந்தைகளுக்கு அதிகளவு திரவ உணவுகளை குடிக்க கொடுக்க வேண்டும் எனவும் கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

வரண்ட காலநிலையுடன் குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு காய்ச்சல் போன்ற நோய்களும் பரவக்கூடும் என வைத்தியர் தீபால் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

கடுமையான வரட்சியினால்

# 90 ஆயிரம் பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் வரட்சியினால் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 90 ஆயிரம் பேர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிலும் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

யாழ்ப்பாணம், திருகோணமலை, இரத்தினபுரி, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் உள்ள 27,883 குடும்பங்களைச் சேர்ந்த 89,480 பேர் குடிநீர் பற்றாக்குறையை எதிர்கொள்வதாக தெரியவருகிறது..

தொடர்ச்சி P2





## சொக்லேட்டில் “கட்டைவிரல்”

■ ராமு தனராஜ்

கொள்வனவு செய்யப்பட்ட சொக்லேட்டில் “கட்டைவிரல்” பகுதி காணப்பட்ட நிலையில், மஹியங்கனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு அறிவித்ததையடுத்து, மஹியங்கனை பொது சுகாதார பரிசோதகர் விசேட பரிசோதனையை மேற்கொண்டார்.

மஹியங்கனை ஆரம்ப வைத்தியசாலையின் ஊழியர் ஒருவர், வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையில் இருந்து சொக்லேட்டை கொள்வனவு செய்துள்ள போதே அதில் கட்டை விரல் காணப்பட்டதை அவதாகித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மூன்று தவணைக்கும் ஒரேயொரு பரீட்சை

### நாளாந்தம் பாடசாலை வரவேண்டும் என்கிறார் சுசில்



அடுத்த வருடம் முதல் தவணைப் பரீட்சைகள் குறைக்கப்பட்டு வருடத்துக்கு ஒரு பரீட்சை மாத்திரம் நடத்தப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஒவ்வொரு பாடம் அல்லது அத்தியாயத்தின் முடிவிலும், மதிப்பீட்டின் மூலம் பெறப்படும் புள்ளிகள் கணினி குறிப்புகளாக பதிவு செய்யப்பட்டு,

தொடர்ச்சி P2

## மலையக தமிழ் எம்.பிகள்

## 9 பேரையும் ஒரே தடவையில் சந்தித்து பேச இணக்கம்

அனைத்து மலையக தமிழ் பாராமன்ற உறுப்பினர்களையும் ஒரே தடவையில் சந்தித்து பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமானால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரமே இதற்கான இணக்கப்பாட்டை ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மலையக பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டுக்காக 3000 மில்லியன் ரூபாயை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளது.

தொடர்ச்சி P2

## கிழக்குக்கு மீண்டும் வந்து முதலிடுங்கள்

### புலம்பெயர்ந்தோருக்கு ஆளுநர் அழைப்பு



■ வா.கிருஸ்ணா

புலம்பெயர்ந்துவாழும் கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள், மீண்டும் கிழக்கு மாகாணத்துக்கு வந்து முதலீடுகளை செய்து கிழக்கு மாகாணத்தை ஏனைய மாகாணங்களைப் போன்று வளப்படுத்துவதற்கு முன்வரவேண்டும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அழைப்பு விடுத்தார்.

தொடர்ச்சி P2

## “இலங்கையில் தமிழர்கள் படுகொலை நடந்தது”



காங்கிரஸ்-யுபிஏ ஆட்சியில்தான் இலங்கையில் தமிழர்கள் படுகொலை நடந்தது என்று தெரிவித்துள்ள இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, தமிழக மீனவர்களின் துயரத்துக்கு திராவிட முன்னேற்ற கழகம் (தி,மு.க) மற்றும் காங்கிரஸும்தான் காரணம் என்று தெரிவித்தார்.

இராமேஸ்வரத்தில் தமிழக பாரதிய ஜனதா கட்சியின் அமைப்பாளரான அண்ணாமலை தலைமையில் “என் மண் என் மக்கள்” என்ற பாதயாத்திரையில் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## “புதிய கிராமம் – புதிய நாடு”

## மட்டக்களப்பில் விசேட மீளாய்வு கூட்டம்

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதிப்படுத்துவதற்கான கிராமியப் பொருளாதார மறுமலர்ச்சி நிலையங்களை வலுப்படுத்துவதற்கான பல்துறை இணைந்த பொறிமுறை தொடர்பான “புதிய கிராமம் - புதிய நாடு” தேசிய ஒருங்கிணைந்த அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான முன்னேற்ற மீளாய்வு தொடர்பான விசேட கலந்துரையாடல் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

## இ.போ.ச சாரதிகள் குறித்து முறையிட புதிய செயலி

இலங்கை போக்குவரத்து சபையின் சாரதிகளால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் பிரச்சினைகள் அல்லது குற்றங்களை தெரிவிப்பதற்கான செயலியை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2




## மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துங்கள்

நாட்டில் நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு இலங்கை மின்சார சபையினால் பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெப்பநிலை அதிகரித்துள்ள நிலையில், மின்சாரத்தின் தேவை அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## முட்டை குறித்த தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யவும்

### பேக்கரி பொருள் விலை உயரும் என அறிவிப்பு

ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் பேக்கரி தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை வழங்கும் திட்டத்தை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு பேக்கரி உரிமையாளர்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## உணவுப் பொருட்களின் விலை 128 சதவீதத்தால் அதிகரிப்பு

உணவுப் பொருட்களின் விலை 128 சதவீதத்தால் மக்களால் தாங்க முடியாத அளவிற்கு உயர்ந்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

பணவீக்கம் தொடர்பில் சனத்தொகை புள்ளிவிபர

தொடர்ச்சி P2



## புதிய கூட்டணியால் புதிய குழப்பம்

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சுயேட்சை உறுப்பினர்களின் குழுவினால் உருவாக்கப்பட்ட புதிய கூட்டணி இதுவரை உருவாகியுள்ள மிகப்பெரிய கூட்டமைப்பாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.

தற்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் மற்றும் குழுக்களுக்கு மேலதிகமாக, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பல அமைச்சர்கள் மற்றும் குமார வெல்கம ஆகியோரும் இந்த கூட்டணி குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

எதிர்வரும் வாரத்தில் இது போன்ற இன்னும் பல குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் லன்சா எம்.பி. குறிப்பிட்டார்.

ஏற்கெனவே 40க்கும் மேற்பட்ட சுயேட்சை பாளுமன்ற உறுப்பினர்கள் புதிய கூட்டணியில் இருப்பதாகவும்,

தொடர்ச்சி P2




## இரண்டு நாள் காய்ச்சலால் 13 வயது மாணவன் மரணம்

காய்ச்சல் காரணமாக நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தனது ஒரே மகன் ஞாயிற்றுக்கிழமை (06) காலை உயிரிழந்துள்ளதாக மேற்படி மாணவனின் தந்தை எம்.என்.இஸ்திகார் தெரிவித்தார்.

வர் நீர்கொழும்பு, நீர்கொழும்பு அல்-ஹிலால் தேசிய பாடசாலையில் தரம் 8 இல் கல்வி பயின்று வந்த அப்துல் அஸீஸ் என்ற பதின்மூன்று வயது சிறுவனே உயிரிழந்துள்ளார்.

மரணம் குறித்து தந்தை கருத்து தெரிவித்த தந்தை தெரிவித்தாவது, “இரண்டு நாட்களுக்கு முன்னர் அவருக்கு தலைவலியுடன் காய்ச்சல் ஏற்பட்டது. அவ்வப்போது காய்ச்சல் குறைந்து கொண்டே வந்தது. பின்னர் சனிக்கிழமை (05) இரவு எனது மகன் ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்திருந்தார்.

தொடர்ச்சி P2

## ஆளுநர் செந்திலுக்கு பிரதமர் பாராட்டு

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின், உணவு பாதுகாப்பு கூட்டம் கடந்த இரண்டு நாட்களாக பிரதமர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அமைச்சர்கள், அந்தந்த மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

இதன்போது, ஆளுநர் செயலகத்திற்கு சனிக்கிழமை (05) விஜயம் செய்த பிரதமர்,

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## சொக்லேட்டில்...

உணவகத்தை பரிசோதித்த பொது சுகாதார பரிசோதகர்கள் ஏனைய சொக்லேட் பொருட்களையும் கைப்பற்றினர், பின்னர் மஹியங்கனையில் உள்ள பல்பொருள் அங்காடியின் அலுமாரிகளை சோதனையிட்டதுடன் தொடர்புடைய வகையைச் சேர்ந்த சொக்லேட்டுகளையும் கைப்பற்றினர்.

## மூன்று...

ஆண்டின் இறுதியில் பரீட்சை புள்ளிகளுடன் சேர்க்கப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

வருங்காலத்தில், ஒரு தவணைக்கு ஒரு செயல்நூல் என்ற அடிப்படையில், மூன்று தவணைகளுக்குமான செயல்நூல்கள், மூன்று பகுதிகளாக மாணவர்களுக்கு வழங்கப்படும் என்றார்.

இந்த முறை அமுலுக்கு வருவதால், நாளாந்தம் பாடசாலைக்கு சமுகமளித்து வகுப்பில் பயிற்சிகளில் செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்றும் எனவே பாடசாலை மாணவர்கள் மேலதிக வகுப்புகளுக்கு செல்வதற்கு இடமோ தேவையோ இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம், பெற்றோர்கள் தேவையற்ற போட்டியில் சிக்கி, மேலதிக வகுப்புகளுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழிக்க வேண்டியதில்லை என்றும் அந்த பணத்தை குழந்தைகளின் உணவு மற்றும் பானங்களுக்காக செலவிட முடியும் என்றும் கூறினார்.

இலவச கல்வியின் அடிப்படை நோக்கங்கள் இதுபோன்ற செயற்பாட்டின் மூலம் நிறைவேறும் என்றும் தெரிவித்த அவர், பாடசாலை மாணவர்களின் புத்தகங்களின் நிறையைக் குறைத்து அவற்றை எடுத்துச் செல்வதை இலகுவாக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

## முட்டை குறித்த...

இந்த தீர்மானம் பேக்கரி தொழில்துறையை கடுமையாக பாதிக்கும் என்றும் இது பேக்கரி பொருட்களின் விலை உயரவும் வழிவகுக்கும் என்றும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூர் சந்தையில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு மற்றும் தேவைகளை கருத்தில் கொண்டு, இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியது.

அதன்படி, இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் இந்தியாவில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பண்ணைகளிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்து ஹோட்டல் மற்றும் பேக்கரிகளுக்கு விற்பனை செய்தது.

பல்வேறு முறைப்பாடுகள் மற்றும் முட்டைக்கான அதிக தேவை காரணமாக, இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை ஹோட்டல் மற்றும் பேக்கரிகளுக்கு விற்பனை செய்யும் திட்டத்தை நிறுத்த முடிவு செய்துள்ளதாகவும், அதற்கு பதிலாக லங்கா சதொச விற்பனை நிலையங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் மூலம் இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் விநியோகிக்கப்படும் என்றும் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அடுத்த வாரம் முதல், பல்பொருள் அங்காடிகள் மற்றும் சதொச விற்பனை நிலையங்களில் ஒரு 42 ரூபாய் என்ற விலையில் கிடைக்கும் என கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனவும் ஏனெனில் பேக்கர் உரிமையாளர்கள் இப்போது உள்ளூர் சந்தையில் அதிக விலைக்கு முட்டைகளை வாங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்றும் ஜயவர்தன குறிப்பிட்டார்.

## இரண்டு நாள்...

இந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக இரவு 10.30 மணியளவில் எமது மகனை நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் அனுமதித்தோம். அங்கு மகன் தீவிர சிகிச்சை பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். டாக்டர்கள் பெரும் முயற்சி மேற்கொண்டனர். என் மகன் இரவு உணவைக் கூடக் எடுத்துக் கொண்டான்.

ஆனால் மகனுக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டது. எனது மகன் ஞாயிற்றுக்கிழமை (06) அதிகாலை 12.20 மணியளவில் உயிரிழந்தார்" என்றார்.

மாணவனின் சடலம் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு வைத்தியசாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 90 ஆயிரம் பேர் பாதிப்பு

யாழ்ப்பாணத்தில் 21 ஆயிரத்து 714 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நபர்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் சங்கானைப் பிரதேசம் ஜூன் மாதத்துக்குப் பின்னர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரை போதிய மழை பெய்யாது எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவ பெயர்ச்சியின் மூலமும் இந்த ஆண்டு இலங்கையில் போதிய மழையை வீழ்ச்சி கிடைக்கவில்லை எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## "இலங்கையில்...

காங்கிரஸ் மற்றும் திராவிட முன்னேற்ற கழகத்தின் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் ஆட்சிக்காலத்தில் தான் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை நடந்தது எனவும் தமிழக கடற்றொழிலாளர்கள் பெரும் துன்பத்துக்கு ஆளானார்கள் எனவும் அமித்ஷா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதில் அமித்ஷா பயன்படுத்திய வார்த்தை நேரடியாக இனப்படுகொலை என்ற அர்த்தத்தை தருகிறதா என நோக்கும் போது "நரசங்கார" என்ற வார்த்தையை பயன்படுத்தியதாகவும், அதன் முதல் நிலை அர்த்தம் பாரிய மனிதப் படுகொலை என்றும் அதனை இனப்படுகொலை என்று குறிப்பிட முடியும் என்றும் விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அதேசமயம் அமைச்சரின் உத்தியோகபூர்வ டுவிட்டரில் தளத்தில் இனப்படுகொலை என்ற வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இ.போ.ச சாரதிகள்...

இந்த செயலியின் ஊடாக எந்தவொரு சம்பவத்தையும் பொதுமக்கள் நேரடியாக சபைக்கு தெரிவிக்க முடியும் என்று இலங்கை போக்குவரத்து சபையின் விபத்து விசாரணை முகாமையாளர் எரந்த பெரேரா தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபை சாரதிகளினால் மேற்கொள்ளப்படும் போக்குவரத்து விதிமீறல்களை ஆவணப்படுத்துவதற்கும் இலங்கை போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, ஒவ்வொரு சாரதியின் போக்குவரத்து விதிமீறல்களையும் ஆவணப்படுத்த புத்தகமொன்று பராமரிக்கப்படும் என்று சபை தெரிவித்துள்ளது.

இது மக்களின் நலன் கருதி எடுக்கப்பட்டதாகவும், பஸ்களில் ஏற்படும் விபத்துக்களைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பான வாகனம் ஓட்டுவதை ஊக்குவிப்பதற்காகவும் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள் இந்த வருடத்தில் இதுவரை குறைந்தது 218 விபத்துக்களில் சிக்கி 19 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வருடாந்தம் 1,400 இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் விபத்துக்குள்ளாவதாகவும் பஸ்கள் பழுதுபார்க்கும் காலத்தில், சாத்தியமான வருமானம் தனியாருக்கு செல்தாகவும் ஆண்டு தோறும் குறித்த பழுதுபார்க்கும் காலத்தில் 800 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுவதாகவும் சபை தெரிவித்தது.

இ.போ.ச பஸ் சாரதிகளினால் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்காக புதிய வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்த செயலி முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

## உணவுப் பொருட்களின்...

திணைக்களம் வெளியிட்டுள்ள அண்மைய அறிக்கைகளின்படி கணிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உணவு அல்லாத வகைப் பொருட்களின் விலை மட்டம் 87 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்த பேராசிரியர், நுகர்வோர் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை மட்டத்தில் சராசரியாக நூற்றுக்கு மூன்று சதவீத அதிகரிப்பு காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

மக்களின் உறுதியான பெறுமதி வீழ்ச்சி போன்ற காரணங்களால் கொழும்பு மாநகரப் பகுதியில் உணவுப் பொருட்களின் விலை 136 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் மக்களின் கொள்வனவு சக்தி (உழைக்கும் சக்தி) வெகுவாகக் குறைந்துள்ளதாகவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன எனவும் கூறினார். 2019 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அரசாங்க மற்றும் தனியார் துறை ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மட்டக்களப்பில்...

இக்கலந்துரையாடலானது மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவ.சந்திரகாந்தனின் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (04) திகதி இடம்பெற்றது.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதமர் தினேஷ் குணவர்தன பிரதம அதிதியாக கலந்துகொண்ட நிகழ்வில் சுற்றாடல் அமைச்சர் ஹாபீஸ் நசீர் ஹகமட், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர்களான ஜனக வக்கும்வெற, கௌரவ அசோக் பிரியந்த, பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன், இரா. சாணக்கியன், உணவு பாதுகாப்பு திட்டத்திற்கான ஜனாதிபதி ஆலோசகர் சுறேன் வட்டகொட, உள்ளிட்ட அமைச்சு மற்றும் திணைக்களங்களின் உயரதிகாரிகள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

உணவு பாதுகாப்பு திட்டத்திற்கான ஜனாதிபதி ஆலோசகர் சுறேன் அவர்களது உணவு பாதுகாப்பு தொடர்பான உரையினை தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் உணவு பாதுகாப்பு தொடர்பான பல்வேறு திட்டங்கள் தொடர்பாக இதன்போது மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் திருமதி.கலாமதி பத்மராஜா விரிவாக விளக்கமளித்தார்.

குறிப்பாக இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிவ சந்திரகாந்தன் அவர்களால் மாவட்டத்தின் உற்பதியினை அதிகரிக்கும் பொருட்டும் உணவு உற்பத்தியில் தன்னிறைவடையும் முகமாகவும் முன்னெடுக்கப்பட்டு வரும் மீன் மற்றும் இறால் வளர்ப்பு திட்டங்களை விரைவுபடுத்துவது தொடர்பிலும் இத்திட்டதிற்கென புதிய முதலீட்டாளர்களுக்கு அரச காணிகளை பகிர்ந்தளிப்பது தொடர்பிலும் விஷேட கவனம் செலுத்தப்பட்டது.

பிரதம அதிதி உள்ளிட்ட அரசியல் பிரிதிநிதிகளின் உரைகள் இடம்பெற்றதனைத் தொடர்ந்து, தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான காணி உறுதிகள், வீட்டமைப்பு திட்டத்திற்கான காசோலைகள்,விவசாயிகளுக்கான விதைகள், மரக்கன்றுகள், விசேட தேவையுடையோருக்கான உபகரணங்கள், விளையாட்டு கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், உழவு இயந்திரம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான பஸ் பாஸ் உள்ளிட்டவை பிரதமரின் கரங்களினால் இதன்போது வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## 9 பேரையும் ஒரே...

எனவே, இந்த நிதியை எந்தெந்த திட்டங்களுக்கு பயன்படுத்த வேண்டும், இது தொடர்பான கட்சிகளின் யோசனைகள் என்ன என்பன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடவே இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.

மலையகத்துக்கான முக்கியத்துவமிக்க அபிவிருத்தி நடவடிக்கைகளின்போது மக்கள் பிரதிநிதிகளை அரவணைத்துக்கொண்டு, அவர்களின் ஆலோசனைகளையும் உள்வாங்கி செயற்படவே அமைச்சர் ஜீவன் தொண்டமான் எதிர்பார்க்கின்றார். இதற்கான அழைப்பையும் அவர் ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**பாராளுமன்றத்தில் 9 தமிழ் எம்.பிக்கள் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.**

மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பாராளுமன்றத்தில் 9 தமிழ் எம்.பிக்கள் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிழக்குக்கு மீண்டும்...

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கிழக்கில் அதிகளவான வளர்ச்சிப்பணியை முன்னெடுக்குமாறு தனக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு, கோட்டைக் கல்லாறு மகா வித்தியாலயத்தில் சனிக்கிழமை (05) மாலை நடைபெற்ற சுவிஸ் நாட்டை சேர்ந்த கல்லாறு சதீஸின் 'பனியும் தண்டனையும்'நூல் வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்னிந்தியாவின் திரைப்பட தயாரிப்பாளரும் பதிப்பாளருமான மு.வேடியப்பன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த கிழக்கு மாகாண ஆளுனர், "மாணவர்களுக்கு எதிர்காலத்தில் நல்ல வழிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். கல்வியை அவர்கள் பற்றுடன் முன்னெடுக்ககூடிய வகையில் அந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

இந்த கிழக்கு மாகாணம் யுத்ததினால் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதி. கடந்த 30வருடமாக இலங்கை அரசாங்கத்தினால் வளர்ச்சிப் பணிகள் முன்னெடுக்கப்படவில்லை.

**இது உங்களின் பிரதேசம், உங்களது நாடு. மீண்டும் கிழக்கு மாகாணத்துக்கு வந்து கிழக்கு மாகாணத்தினை ஏனைய மாகாணங்களுக்கு சமாந்தரமாக கொண்டுவருவதற்கு அவர்களின் முழுமையான ஒத்துழைப்பு தேவை**

ஆனால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கிழக்கு மாகாணத்தில் அதிகளவான வளர்ச்சிப்பணியை முன்னெடுக்குமாறு எனக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். கிழக்கு மாகாணத்தினை ஏனைய மாகாணங்களுக்கு சமாந்தரமாக கொண்டுவரவேண்டிய பொறுப்பினை எனக்கு வழங்கியுள்ளார்.

கடந்த காலங்களில் இங்கிருந்து புலம்பெயர்ந்து சென்றுள்ளவர்கள் மீண்டும் இங்குவருவதற்கு முன்னுதாரணமாக இங்கு வ்ந்துள்ளார் .புலம்பெயர்ந்து சென்றவர்கள் இங்கு முதலீடுகளை செய்து தொழில்துறையினையும் அபிவிருத்திகளையும் செய்யவேண்டும்.

இது உங்களின் பிரதேசம், உங்களது நாடு. மீண்டும் கிழக்கு மாகாணத்துக்கு வந்து கிழக்கு மாகாணத்தினை ஏனைய மாகாணங்களுக்கு சமாந்தரமாக கொண்டுவருவதற்கு அவர்களின் முழுமையான ஒத்துழைப்பு தேவை" என்றார்.

## மின்சாரத்தை...

மாலை 6 மணிமுதல் 9 மணிவரையான காலப்பகுதியில் மின்சார தேவை அதிகமாக காணப்படுவதாகவும் அந்த காலப்பகுதியில் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் மின்சாரத்தை பயன்படுத்துமாறும் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, வரட்சியான காலநிலை நிலவுகின்ற பிரதேசங்களில் விவசாயத்திற்குத் தேவையான நீரை நீர்த்தேக்கங்களில் இருந்து விடுவித்தல் தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் தோன்றியுள்ளது.

குறிப்பிட்ட சில நீர்த்தேக்கங்களில் இருந்து நீரை விடுவிக்கும்போது அது மின் உற்பத்தியைப் பாதிக்கும் என்பதால் அவ்வாறு நீரை விடுவிப்பதன் மூலம் மின் உற்பத்தி வீழ்ச்சி அடைந்தால் நாட்டில் மின் வெட்டை அமுல்படுத்த வேண்டிய நிலை தோன்றும் சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

**மின்சாரத்தை துண்டிக்காத வேலைத்திட்டத்துக்கு செல்லும் வகையில் அமைச்சரவையிலும் கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

விவசாயம் மற்றும் மின் உற்பத்தி என்ற இரண்டு விடயங்களும் பாதிக்காத வகையில் இந்த சிக்கலைத் தீர்க்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகவும் மின்சாரத்தை துண்டிக்காத வேலைத்திட்டத்துக்கு செல்லும் வகையில் அமைச்சரவையிலும் கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய கூட்டணியால...

அந்த எண்ணிக்கையை 50 ஆக அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் நிமல் லான்சா மேலும் தெரிவித்தார்.

# ஆளுநர் செந்திலுக்கு...

செந்தில் தொண்டமான் ஆளுநராக பொறுப்பேற்று இரண்டு மாதக்காலங்களில் முன்னெடுத்த வேலைத்திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக 700 ஆசிரியர் நியமனம்,5000 இளைஞர்களுக்கு IT வேலைவாய்ப்பு, இந்திய அரசிடமிருந்து 2371 மில்லியன் கடனற்ற நிதியுதவி, ஜப்பான் அரசுடன் இணைந்து அருகம்பேவில் உலாவுதல் (surff) ஆரம்பித்தல், சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரித்தல்,கிழக்கு மாகாணத்திற்கு முதல் முறையாக கோர்டிலா குரூஸ் கப்பலை வரவழைத்தமை, ஆயிரத்திற்கும் மேற்பட்ட காணி உரிமை பெற்றுக்கொடுத்தமை ஆகியவற்றுக்கு பாராட்டு தெரிவித்தார்.

பீச் கிளீனிங் வேலைத்திட்டத்தின் ஊடாக ஐம்பதாயிரம் பிளாஸ்டிக் கழிவு பொருட்கள்,ஒரு இலட்சம் பிளாஸ்டிக் அல்லாத கழிவு பொருட்கள் அகற்றப்பட்டு கடற்கரைகள் சுத்தம் செய்யப்பட்டமை, சட்ட ஒழுங்கை சீராக செயற்படுத்தல் போன்ற பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை குறுகிய காலத்தில் வெற்றிகரமாக முன்னெடுத்தமைக்கு பாராட்டுக்களை தெரிவித்துடன், ஆளுநர் மத சார்பற்ற வகையில் நியாயமான முடிவுகளை அனைவருக்கும் உதவும் வகையில் செயற்படுவதாகவும் அறிய கூடியாதாக உள்ளது எனவும் தெரிவித்தார்.

மேலும் மட்டக்களப்பு மாவட்ட மீளாய்வு கூட்டத்தில் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், "மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்தில் நியாமான விடயங்கள் புறக்கணிக்கப்பட்டன. மக்கள் பிரதிநிதியாக குரல் எழுப்பியும் எந்த பிரச்சினைகளுக்கும் தீர்வு எட்டப்படவில்லை, ஆனால் ஆளுநராக செந்தில் தொண்டமான் பொறுப்பேற்ற பின்னர், ஓரளவேனும் நியாயமான முறையில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடத்தக்கூடியதாக உள்ளது" என சுட்டிக்காட்டினார்.

# "அவதானமாக இருக்கவும்"

எம். றொசாந்த்

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் பொதுமக்களுக்கு இடையூருவிளைவிக்கும் முகமாகநடந்து கொண்ட வெளிமாவட்டத்தைசேர்ந்த நான்கு ஆண்கள், சனிக்கிழமை (05) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மற்றும் புத்தளம் பகுதியை சேர்ந்த 4 ஆண்களேகைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் அடையாள அட்டை உள்ளிட்ட தம்மை அடையாளப்படுத்தி கொள்ளும் ஆவணங்கள் எவையும் இல்லை எனவும் , அவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் , யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிமாவட்டங்களை சேர்ந்த சிலர் யாழ்.நகர் பகுதிகளில் கூடி , ஊதுபத்தி விற்பனை , சாத்திரம் சொல்லுதல் , யாசகம் பெறல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் நகர் பகுதிக்கு வரும் புலம்பெயர் நாட்டவர்களை இலக்கு வைத்தும் உள்ளூர் வாசிகளையும் தொந்தரவு செய்யும் முகமாக செயற்பட்டனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து , நகர் பகுதியில் பொலிஸார் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டு , அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட பெண்கள் உள்ளிட்ட பலரை நகர் பகுதியில் இருந்து அப்புறப்படுத்தி இருந்தனர்.

அவர்களில் தம்மை அடையாளப்படுத்தும் ஆவணங்கள் இல்லாத நான்கு ஆண்களை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து உள்ளனர்.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் உள்ள பிரபல ஆலயங்களான மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. செல்வ சந்நிதி முருகன் ஆலய மஹோற்சவ திருவிழா 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் பிரசித்தி பெற்ற ஆலய திருவிழாக்களை இலக்கு வைத்து , யாசகம் பெறுவோர் , ஊதுபத்தி விற்போர் , சாத்திரம், குறி சொல்வோர் என பலரும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் நிலையில் அவர்களுடன் ஆலயங்களில் பக்தர்களின் சங்கிலி உள்ளிட்ட உடமைகளை திருடும் கும்பல்களும் வருகை தந்துள்ளதாகவும் , அவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்கும் மாறும் பொலிஸார் கோரியுள்ளனர்.

அத்துடன் இவ்வாறானவர்களை கண்காணிக்கும் விசேட செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



## ரக்பி பார்த்தார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு ரோயல் கல்லூரிக்கும் கண்டி திரித்துவக் கல்லூரிக்கும் இடையிலான 77வது வருடாந்த பிராட்பி ஷீல்ட் ரக்பி போட்டியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டார்.

கொழும்பு றோயல் கல்லூரிக்கும் கண்டி திரித்துவக் கல்லூரிக்கும் இடையிலான போட்டி இலங்கைப் பாடசாலை ரக்பியில் மிகவும் பழமையானதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான ரக்பி போட்டியாகக் கருதப்படுகிறது.

இந்தப் போட்டி கொழும்பு றோயல் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

## கஞ்சா வைத்திருந்தவர் கைது

பு.கஜிந்தன்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட, பொன்னாலை பகுதியில் வைத்து கேரளக் கஞ்சாவுடன் 31 வயதுடைய சந்தேகபர் வட்டுக்கோட்டை மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

எழுது மட்டுவாழ் பகுதியை சேர்ந்த இருவர் உட்பட மூவர் இவ்வாறு கஞ்சாவை எடுத்துச் செல்லும்போது , சந்தேகமான முறையில் வீதியில் சென்ற வாகனத்தை வட்டுக்கோட்டை - பொன்னாலை பகுதி மக்கள் வழிமறித்து சோதனையிட்டனர்.



இதன்போது வாகனத்தில் 227 கிலோ 918 கிராம் எடையுள்ள கஞ்சா இருப்பது அவதானிக்கப்பட்டது. இதன்போது வாகனத்தில் இருந்த எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த இருவர் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் அவ்வழியே வந்த கடற்படையினருக்கு மக்கள் விடயத்தை தெரியப்படுத்தினர். அவர்கள் கஞ்சா பொதிகள் மற்றும் வாகனம் என்பவற்றுடன் சந்தேகநபரை கைது செய்து வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மெற்கொள்ளப்பட்டு வருகின்றது. வட்டுக்கோட்டை பகுதி மக்களின் இந்த முன்மாதிரியான துணிகர செயற்பாட்டை பலரும் பாராட்டி வருகின்றனர்.

## விமான எதிர்ப்பு தோட்டாக்கள் மீட்பு

விமான எதிர்ப்பு தோட்டாக்கள், கைக்குண்டுகள், வெடிபொருட்கள் மற்றும் ஆயுத பாகங்கள் என்பனவற்றை களனிப் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் குழு சோதனை செய்து கண்டெடுத்துள்ளது.

சீதுவ லியனகெமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள 8 ஏக்கர் தோட்டத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இவை மீட்கப்பட்டுள்ளன.

விமான எதிர்ப்பு வெடிமருந்துகள் இரண்டு, ஒரு கைக்குண்டு, ஒரு எல்எம்ஜி தோட்டாக்கள், இரண்டு வகையான வெடிபொருட்கள், ஒரு சிறிய துப்பாக்கியின் 17 பாகங்கள், ஒரு டெட்டனேட்டர், இரண்டு வாட்டர் ஜெல் குச்சிகள் மற்றும் பத்து தோட்டாக்கள் அடங்கிய சரம் ஒன்றையும் கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அனுலியனகேமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள இத்தோட்டத்தின் நிறைவின் போது மேல்மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனினால் இவற்றை கண்டுபிடிக்க முடிந்துள்ளது.

இவற்றை எடுத்துச் சென்று இந்தத் தோட்டத்தில் மறைத்து வைத்திருந்தவர்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவற்றை மறைத்து வைத்தவர்கள் பற்றிய தகவல்களை வெளிக்கொண்டு வந்து அவர்களைக் கைது செய்ய களனிப் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முன்னாள் உறுப்பினர் மீது தாக்குதல்

நிதர்ஷன் வினோத்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரான புளொட் அமைப்பின் அங்கத்தவர் சொக்கலிங்கம் சபேசன் (வயது 44) மீது ஞாயிற்றுக்கிழமை (06) தாக்குதல் மேற்கொள்ள ப்பட்டுள்ளது.

சுன்னாகம் ஐயனார் கோவில் பகுதியில் வசிக்கும் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றுக்கு முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் புலம்பெயர் மக்களின் உதவியில் குழாய் கிணறு ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளார்.



இந்நிலையில் குறித்த பெண் தலைமைத்துவ குடும்பத்தின் அயல் வீட்டுக்காரர் குழாய் அமைத்ததால் தன்னுடைய வீட்டு கிணறு பாதிப்படைகின்றது என தெரிவித்து பிரதேச சபை உறுப்பினர் மீது கடும் தாக்கல் நடத்தியுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த பிரதேச உறுப்பினர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததோடு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். இத்தாக்குதல் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஒன்று கூடல் நிகழ்வு

கியாஸ் ஷாபி

கிண்ணியா பிரதேச பாரம்பரிய கலைஞர்களுக்களின் ஒன்று கூடல் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் சனிக் கிழமை (5) இடம் பெற்றது.

மத்திய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் " தொலஸ் மகே பஹன" எனும் வேலைத்திட்டத்தின் கீழ், கிண்ணியா பிரதேச செயலக கலாசார அதிகார சபையினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிரதேச செயலாளர் எம்.எச்முகம்மது கனி தலைமையில், நடைபெற்ற இந்நிகழ்வில், கலாசார அதிகார சபை உறுப்பினர்கள் மற்றும் கிண்ணியா பிரதேச பாரம்பரிய கலைத்துறை சார்ந்த முக்கிய கலைஞர்கள் இதில் கலந்து கொண்டு கலைத் திறமைகளை வெளிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது



## போராட்டம்

ஏ. எம். கீத்

திருகோணமலை மாவட்டத்தில் நிலாவெளி வீதியில் பெரியகுளம் பிரதேசத்தில் உச்சி பிள்ளையார் மலை பகுதியில் தொல்லியல் துறை 2015 ஆண்டு தமது எல்லைகளாக அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் விகாரை அமைக்கும் பணிக்கு எதிராகவும், அழிக்கப்பட்ட நாகதம்பிரான் சிலையை மீளமைத்து தருமாறு கோரியும் அப்பகுதி மக்கள் போராட்டம் நடத்தினர்

## ரயிலில் மோதி பெண் உயிரிழப்பு

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம், புங்கன்குளம் ரயில் நிலையத்துக்கு அருகில் ரயில் மோதி இளம் குடும்ப பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி சனிக்கிழமை (05) சென்ற ரயிலேயே மோதியே குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

அரியாலைப் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையை பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, குறித்த பெண் தொடருந்து முன் பாய்ந்து உயிரை மாய்த்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

எனினும், பெண்ணின் சடலத்தை யாழ்ப்மாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வியப்பூட்டும் புழு கண்டுப்பிடிப்பு

வியப்பூட்டும் வகை புழுவை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். 46,000 ஆண்டுகள் பழமையான இந்த புழு இனத்தை விஞ்ஞானிகள் சைபீரியாவில் பனி மூடிய வனப்பகுதியில் மேற்கொண்ட ஆய்வின் போது கண்டுபிடித்தனர்.

இந்த உறங்கும் புழுக்களுக்கு விஞ்ஞானிகளால் தண்ணீர் மற்றும் உணவு வழங்கப்பட்டது, அதன் பிறகு அவை உறக்கநிலையிலிருந்து வெளியே வந்து விழித்திருந்தன



விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, இந்த புழு ப்ளீஸ்டோசீன் *Pleistocene* சகாப்தத்தின் கடைசி பாதியில் இருந்து ஒரு விலங்கு இனமாகும். யானைகளைப் போன்ற கம்பளி மாமத்கள் இந்தக் காலத்தில் வாழ்ந்தன.

இந்த புழுக்களுக்கு விஞ்ஞானிகள் காலத்தை கடந்து செல்லக்கூடிய அற்புதமான புழுக்கள் என்று பெயரிட்டுள்ளனர்.

## நாமல் மீது தாக்குதல்: இருவர் கைது

ஊழல் எதிர்ப்பு முன்னணியின் தலைவர் நாமல் குமாரவை தாக்கி அவரிடமிருந்து 60,000 ரூபாய் மற்றும் கைத்தொலைபேசியை அபகரித்த குற்றச்சாட்டின் பேரில் தந்தை மற்றும் மகன் ஆகிய இருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக வரக்காபொல பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட தந்தை முப்பத்தைந்து வயதுடைய வர்த்தகர் மற்றும் அவரது இருபத்தி மூன்று வயது மகன் கூலித் தொழிலாளி ஆவார்.

நாமல் குமாரவின் மனைவி செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாக அப்பகுதியின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தாக்குதலில் படுகாயமடைந்த நாமல் குமார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.தடிகளால் தாக்கப்பட்டதாகவும் கால்களால் உதைக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்கள் தொடர்பில் வரக்காபொல பொலிஸ் அதிகாரிகள் குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பொலிஸரை தாக்கிய படை வீரர் இருவர் கைது

அஸ்ஹர் இப்றாஹிம்

அம்பாறை வீரசிங்க விளையாட்டு மைதானத்தில் கடந்த 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற திருவிழா நிகழ்வின் போது பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த அம்பாறை பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவின் உப பொலிஸ் உத்தியோஸ்தர் மற்றும் பொலிஸ் உத்தியோஸ்தரை தாக்கிய படை வீரரையும் அவரது நண்பர்கள் இருவரையும் அம்பாறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருவிழா பூமியில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற முறுகல் நிலமையை சமரசம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் மீது மதுபோதையிலிருந்த குழுவினர் தாக்கியுள்ளனர்.

பலத்த காயங்களுக்குள்ளான இரு பொலிஸ் உத்தியோஸ்தர்களும் சிகிச்சைக்காக அம்பாறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இந்த தாக்குதல் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொண்டிருந்த அம்பாறை பொலிஸார் அம்பாறை சுதுவெல பகுதியில் 32 வயதுடைய இளம் படை வீரரையும் அவரது நண்பர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக அம்பாறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வருடாந்த திருநாள் திருப்பலி







மன்னார் ஈச்சளவக்கை குழந்தை யேசு ஆலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலி ஞாயிற்றுக்கிழமை (06) வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது கடந்த 03-08-2023 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மூன்று நாட்கள் ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று திருவிழா திருப்பலி நிறைவு பெற்றது. இவ்விழாவில், ஈச்சளவக்கை விடத்தல்தீவு பெரியமடு பங்கு மக்கள் கலந்திருந்தனர் திருவிழா திருப்பலி வழிபாடுகளின் பூஜைகளை வணக்கத்துக்குரிய அருட்தந்தை லேபோன்சுதன் அவர்களின் தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதில் அருட்கன்னியர்கள் பலரும்கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

யது பாஸ்கரன்

## சிவாஜிலிங்கத்துக்கு அழைப்பாணை

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் தேசிய கட்சியின் பொது செயலாளருமான எம். கே.சிவாஜிலிங்கத்துக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் ஒப்பமிட்டு, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் உறுதிப்படுத்தப்பட்டு ஒப்பமிடப்பட்டு குறித்த அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

சட்ட முறையற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்து கொண்டமைக்காகவே அழைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டு திங்கட்கிழமை (07) வழக்கிற்காக சமூகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# இருப்பவரிடம் அறவிட்டு இல்லாதோருக்கு வழங்கவேண்டும்

குடிநீர் கட்டணம் திருத்தப்பட்டதன் பின்னர், சாதாரண மக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ள அதேவேளை, கட்டண அதிகரிப்பை எண்ணி கவலை கொண்டுள்ளனர். நீர்ஊற்றுகளையும், குழாய் கிணறுகளையும் நம்பியிருப்போருக்கு கட்டண அதிகரிப்பு பிரச்சினையே இல்லை. பெருந்தோட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கும் ஒரு சில கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கும் நீர்க்கட்டண அதிகரிப்பு பெரும் தாக்கத்தை செலுத்தாது.

எனினும், நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கீழ், நீரைப் பெற்றுக்கொள்வோர், வழமையை விடவும் இரண்டு, மூன்று மடங்குகளுக்கு மேல் கட்டணத்தை செலுத்தவேண்டியுள்ளது. இதற்கிடையே பாடசாலைகளில் இருந்தும் நீர்க்கட்டணத்தை அறவிடுவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

நீர்க்கட்டணம் அதிகரிக்கப்பட்டதை அடுத்து, ஹோட்டல்களில் உணவுகளின் விலைகள் அதிகரித்துள்ளன. ஹோட்டல்களில் உள்ள மலசலகூடங்கள் பூட்டப்பட்டன. பொது மலசலகூடங்களில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, வணக்க ஸ்தலங்களில் இருந்து கட்டணங்களை அறவிட்டு, சாதாரண மக்களுக்கு நிவாரணம் வழங்கும் முறைமையொன்றை முன்வைக்குமாறு பொதுவெளியில் கருத்துகள் பரவுகின்றன.

வாடகை வீடுகளில் குடியிருப்போரும், பெருநகர்களில் தங்கியிருந்து வேலைசெய்வோரின் மீது சுமத்தப்பட்டுள்ள சுமையும் பன்மடங்கில் அதிகரித்துள்ளன. செலவுக்கு ஏற்றவகையில் கட்டணங்களின் மறுசீரமைப்பு செய்யவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

எனினும், சாதாரண மக்களை பாதிக்கும் வகையில் கட்டண அதிகரிப்பதை அனுமதிக்கமுடியாது. நாட்டின் பொருளாதாரம் தலைதூக்கிவிட்டது என்ற அரசியல் பேச்செல்லாம் இனியும் எடுபடாது.

பொருளாதாரம் தலைதூக்கி இருந்தால், கட்டணங்களை அதிகரிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. இதேவேளை, முதலீட்டாளர்களும் முகம் சுளித்துக் கொண்டிருக்கின்றனர்.

வரி, வட்டி, இதர சேவைகளின் கட்டணங்கள் அதிகரிப்பால், முதலீடு செய்வதை பலரும் விரும்பவில்லை. இதனால், வேலைவாய்ப்புகள் இன்றியிருப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

அரச துறை உட்பட தனியார் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு பல ஆண்டுகளாக சம்பளம், கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவில்லை. வர்த்தகம் ஸ்தம்பிதமடைந்துள்ளது. நாட்கூலிகளாக பணியாற்றுவோருக்கு வாரத்துக்கு இரண்டொரு நாட்கள் மட்டுமே வேலைகள் கிடைக்கின்றன.

தற்போது பெறும் சம்பளம், வீட்டுத்தேவைகள், கல்வி உள்ளிட்ட இதர தேவைகளுக்கு செலவழித்தால் அரை மாதத்துக்குக் கூட போதுமானதாக இல்லை. இதனிடையே, சாதாரண மக்களிடமிருந்து சுரண்டும் வகையில், அமுல்படுத்தும் புதிய கட்டண சீர்த்திருத்ததை அரசாங்கம் கைவிடவேண்டும்.

பலமுறை வழியுறுத்தியதைப் போல, பல இலட்சம் ரூபாய் நீர், மின்சார கட்டணங்களை செலுத்தாதவர்களிடம் இருந்து அறவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். சட்டம் சகலருக்கும் சமமானதாக இருக்கவேண்டும். இல்லையேல் இருப்பவர்கள் சுகபோகமாக வாழ்வார்கள். இல்லாதவர்கள் வானத்தையும் பூமியையும் நோக்கி பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய நிலைமையே ஏற்படும்.

எனினும், இருப்பவர்களிடம் இருக்கட்டும் இல்லாதவர்களிடம் கறந்துகொள்வோம் என்ற நிலைமையில் ஆட்சி நகர்ந்து கொண்டிருக்கின்றது.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

அராஜகம், சண்டித்தனம் செய்வது தங்கள் பொழுதுபோக்கு எனச் செய்யும் கூட்டம் வளர்ந்து பெருகிக்கொண்டே வருகின்றது.

யாரோ, எவரோ வீதியில் வாக்குவாதமம் செய்தால், அதை ஊதிப்பெருக்க என ஒரு பெரும் கூட்டம், சண்டியர் கூட்டம், சொல்லிவைப்பது போல் வந்துவிடுகின்றது. இவை எல்லாமே இப்போது சாதாரண நிகழ்வாக மாறிவிட்டன.

கூட்டம் சேரச்சேர அங்குவரும் சனங்களின் பணம், நகைகளை சூட்சுமமாகக் கொள்ளையடித்து விடுவது, அடிக்கடி திட்டமிட்டு நடக்கின்றது. மானுடம் மரித்துவிட்டதோ என எண்ணத் தோன்றுகின்றது.

இந்தச் செயல்கள் தொடர்ந்தால், பாதுகாப்பு மக்களுக்கு எப்படி கிடைக்கப்போகின்றது? பொலிஸார் உறக்கத்தில்!

குற்றம் புரிவதையே தொழில் எனச் செய்தால், இத்தகைய குற்றச் செயல்களை அடக்கி ஒடுக்குவது யார்? பொலிஸார் என்ன செய்கின்றார்கள்? கண்முன்னே நடக்கும் கோர நிகழ்வுகளை ரசித்துக் கொள்வதும் அதனுடன் இணைவதும் நாட்டின் சாபக்கேடு. அமைதி வேண்டும் என்கின்றோம். ஆனால், அது எங்கே?

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இந்தியாவையும், வடக்கையும் இணைக்கும் பாலமும், வடக்கின் பொருளாதாரமும்



என்.கே.அஷோக்பரன்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹவின் இந்திய விஜயத்தின் போது சில ஒப்பந்தங்களும், பல்வேறுபட்ட இந்திய-இலங்கை உறவு, முதலீடு, மற்றும் அபிவிருத்திசார் விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. அதில் திருகோணமலைத் துறைமுகத்தை மையப்படுத்திய அபிவிருத்தி என்பதைத்தாண்டி, மேலோட்டமாக குறிப்பிடப்பட்டிருந்த இரண்டு விடயங்கள் கவனத்தை ஈர்ப்பதாக அமைகிறது. ஒன்று, தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்தையும், இலங்கையின் காங்கேசன்துறையையும் இணைக்கும் படகுச்சேவையை ஆரம்பித்தல், மற்றையது இலங்கைக்கும், இந்தியாவிற்குமிடையிலான தரைவழி, மற்றும் ரயில் பாலம் ஒன்றை அமைத்தல். இந்த இரண்டும் இலங்கையின் வடக்கின் தலையெழுத்தையே மாற்றியமைக்க வல்லன.

இந்தப் பாலம் அமைப்பது பற்றிய முன்மொழிவு பேச்சளவில் இருக்கும் போதே, அதுவும் இதற்கு பெரிதாக முக்கியத்துவம் ஊடகங்களால் வழங்கப்படாதபோதே, இது அரசியல் ரீதியிலான பேசு பொருளாக மாறியிருக்கிறது.

தென்னிந்தியாவிற்கும் இலங்கையின் வடக்கிற்கும் இடையில் படகுச் சேவையைத் தொடங்குவது மற்றும் தரைப்பாலம் மற்றும் ரயில் பாலம் இரண்டையும் நிர்மாணிப்பது போன்ற உட்கட்டமைப்புகள் பொருளாதார வளர்ச்சி, கலாசார பரிமாற்றம் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்தி இலங்கையின் வடபகுதிக்கு நன்மையளிக்கும் என்பது இந்தத் திட்டத்திற்கு ஆதரவான கருத்துக்கள். எவ்வாறாயினும், இந்த லட்சிய முயற்சியானது, பாதுகாப்பு, வள ஒதுக்கீடு, பிராந்திய தகராறுகள், சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் பூகோள அரசியல் ஆகியவற்றின் மீது ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பிலான கவலைகள் காரணமாக, தெற்கில் இருந்து, குறிப்பாக அரசியல் ரீதியாக சாத்தியமான எதிர்ப்பை எதிர்பார்க்கலாம்.

ஆனால் இந்தத் திட்டம் நிறைவேறினால், அது இலங்கையின் வடக்கின் பொருளாதார நிலையை இந்தத் திட்டம் நிறைவேறிய இரண்டு தசாப்தங்களுக்குள் மாற்றியமைக்கும் என்பது திண்ணம். இன்று பொருளாதார ரீதியில் இலங்கையின் மிகப் பின்தங்கிய மாவட்டமான வடக்கு, இதனால் பெரும்பலனடையும். படகு சேவை மற்றும் பாலங்கள் இலங்கையின் வடபகுதிக்கு பரந்த இந்திய சந்தைக்கு மேம்பட்ட அணுகலை வழங்கும். இந்த மேம்படுத்தப்பட்ட இணைப்பு வர்த்தகத்தை அதிகரிக்கும், வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் மற்றும் பிராந்தியத்தின் பொருளாதாரத்தை பல்வகைப்படுத்தும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

இலங்கையின் வடக்கில் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும். இது வடக்கோடு நின்றுவிடாது, வடமத்திய, கிழக்கு மாகாணங்களில் சுற்றுலாத்துறைக்கும் பயனளிக்கும். சுற்றுலாப் பயணிகளின் வருகை விருந்தோம்பல் மற்றும் சேவைத் துறைகளில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கி, சுற்றுலாத்துறையில் பின்னணியிலிருக்கும் வடக்கை, முன்னணிக்குக் கொண்டுவரும். குறிப்பாக வரலாற்று, மத ரீதியிலான சுற்றுலாக்களுக்கான கேள்வியை இது அதிகரிக்கும். இந்தியாவிற்கும், இலங்கையில் வடக்கு, வடமத்திய, மற்றும் கிழக்குக்கு இடையிலான மதரீதியான, வரலாற்று ரீதியிலான தொடர்புகள் இந்த சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு அடிப்படையாகும். தரைவழி, மற்றும் படகுவழி இணைப்பு ஏற்படும்போது, அது இந்திய சந்தைக்கு இலங்கையின் வடக்கு, வடமத்திய, மற்றும் கிழக்கை அணுகுவதற்கு இலகுவானதாக மாற்றுகிறது. பாலங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உள்கட்டமைப்பு கட்டுமானம் பிராந்திய வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும். வர்த்தகம், சுற்றுலா எல்லாம் அதிகரிக்க, அதன் தேவையைச் சமாளிக்கவென, மேம்படுத்தப்பட்ட வீதிகள், புகையிரத சேவைகள், மற்றும் துறைமுக வசதிகள், மின்சாரம், குடிநீர், தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு வசதிகள் என இலங்கையின் வட பகுதிக்கு அதிக வணிகங்களையும் முதலீட்டாளர்களையும் இது ஈர்ப்பதாக அமையும். மேம்படுத்தப்பட்ட இணைப்பு தென்னிந்தியாவிற்கும் இலங்கையின் வடக்கிற்கும் இடையே கலாசார பரிமாற்றம், புரிதல் மற்றும் பரஸ்பர மரியாதையை வளர்க்கும். இது இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தும். இந்தத் திட்டத்தில் பங்குதாரராக இந்தியாவிற்கு உள்ள முக்கிய பலன்களில் இதுவுமொன்று. இலங்கையின் வடக்கில் இந்தியா வேரூன்ற இது வழிசமைக்கும். வடக்கின் பொருளாதார மேம்பாடு என்பது, வடக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும், வடக்கின் தலையெழுத்தை மாற்றும் ஒரு நடவடிக்கையாக அமையும்.

ஆனால், வடக்கில் இந்தியா வேரூன்றுவதுதான், தெற்கு இதனை சந்தேகத்துடனும், அச்சத்துடனும் அணுகுவதற்கும் காரணமாக அமையும். தரை மற்றும் புகையிரத பாலங்களை நிர்மாணிப்பது இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாடு பற்றிய கவலைகளை மீண்டும் தூண்டலாம், இறையாண்மையில் ஊடுருவல் ஏற்படக்கூடும் என்ற அச்சம் தெற்கில் கட்டாயம் எதிரொலிக்கும். இந்தத் திட்டத்தை இலங்கையின் இறையாண்மைக்கு சமரசம் செய்வதாக சித்தரித்து அரசியல் லாபம் பெற எதிர்ப்பை ஊக்குவிக்கலாம். படகுச் சேவை மற்றும் பாலங்களை குறிப்பிடத்தக்க பாதுகாப்பு அபாயங்களாக தெற்கின் அரசியல்வாதிகள் உருவகிப்பார்கள். இந்தத் திட்டத்தினால் ஏற்படும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது இலங்கையின் வடக்கிற்கு முதன்மையாக நன்மை பயக்கும். இதனால் தெற்கிற்கு நேரடியான நன்மைகள் எதுவுமில்லை ஆனால் அதேவேளை இது இறையாண்மை, தேசியபாதுகாப்பு, தேசிய ஒருமைப்பாடு சார்ந்த ஆபத்துக்களை தோற்றுவிக்கலாம். ஆகவே இந்தத்திட்டம் தேவையற்றது என்ற கருத்து தெற்கின் தேசியவாதிகளிடையே ஓங்கி ஒலிக்கலாம். இந்த முயற்சி ஏனைய நாடுகளிடையே குறிப்பாக பூகோள அரசியல் சார் அச்சங்களை ஏற்படுத்தும். பூகோள அரசியல் பதட்டங்களைத் தூண்டக்கூடிய, பிராந்தியத்தில் இந்தியாவின் செல்வாக்கை ஆழப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இது பாக்கப்படும். குறிப்பாக இலங்கையின் தெற்கில் வேரூன்றிக்கொண்டிருக்கும் சீனா இதனை விரும்பாது. ஆகவே தெற்கின் சீன ஆதரவு சக்திகள் இந்தத் திட்டத்தை முறியடிக்க சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும்.

ஆகவே இத்தனையையும் கடந்தால் மட்டும்தான், இந்திய-இலங்கைப் பாலம் என்ற கனவும், வடக்கின் பொருளாதார மேம்பாட்டிற்கான பெரும் ஊக்கமும் சாத்தியமாகும். இந்தியா விரும்பினால், இந்தியாவிற்கு இது தேவை என இந்தியா கருதினால், இதனை நீண்டகாலத்தில் இந்தியாவினால் சாத்தியப்படுத்த முடியும். தெற்கு வெளிப்படுத்தும் அச்சத்தை களையவேண்டியதுதான் இந்தியாவின் முதற்பணியாக அமையும். பாதுகாப்பு மற்றும் இறையாண்மை தொடர்பான கவலைகளைப் போக்குவதும், திட்டத்தின் சாத்தியமான பலன்களை, குறிப்பாக வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் நோக்கில், இந்த முயற்சியின் பலன்கள் இலங்கை முழுவதும் சமமாக விநியோகிக்கப்படுவதை உறுதிசெய்வதை தெற்கிற்கு உணர்த்த வேண்டியது அத்தியாவசியமானதாகும். இது தமிழர்களுக்காக இந்தியா செய்வது என்ற எண்ணத்தைக் களைய வேண்டும். இது முழு இலங்கைக்கும் நன்மை பயக்கும் திட்டம் என்ற எண்ணம் விதைக்கப்பட வேண்டும். கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்தவும் மற்றும் உள்கட்டமைப்பு முறையான நோக்கங்களுக்காக மட்டுமே சேவை செய்கிறது என்பதை உறுதிப்படுத்துவதும் அவசியம். இதற்காக இலங்கை இந்திய கரையோர, மற்றும் எல்லைப்பாதுகாப்பு துறைகளிடையே புரிந்தணர்வும், இணைந்தியங்கும் உறவும் கட்டியெழுப்பப்பட வேண்டும். இலங்கையில் ஒருபோதும் பிரிவினையை இந்தியா ஆதரிக்காது என்பதை இந்தியத வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். வரலாறு இந்த விடயத்தில் இந்தியாவிற்கு எதிராக இருக்கிறது. மீண்டும் அந்த வரலாறு மீளாது என்ற உறுதிப்பாட்டை இந்தியா இலங்கைக்கு, குறிப்பாக தெற்கிற்கு வழங்கவேண்டும். இதை இந்தியா வெற்றிகராமாகச் செய்தால், அது இந்திய-இலங்கை உறவின் தன்மையையே பலப்படுத்துவதாக அமையும். தமிழர்களுக்கு இந்தியா, ஆகவே சிங்களவர்களுக்கு சீனா என்ற தெற்கின் பார்வை மாறுவதில்தான், இந்தியாவின் இராஜதந்திர வெற்றி தங்கியிருக்கிறது.

தென்னிந்தியாவிற்கும் இலங்கையின் வடக்கிற்கும் இடையில் ஒரு படகுச் சேவையை ஆரம்பிப்பதற்கும் பாலங்களை அமைப்பதற்குமான முன்மொழிவு பொருளாதார அபிவிருத்தி, கலாசாரப் பரிமாற்றம் மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்புக்கான தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது என்பது மறுக்கமுடியாதது. இதனால் இலங்கையின் வடக்கு குறிப்பிடத்தக்க வகையில் பயனடையும் அதே வேளையில், இலங்கையின் தெற்கில் ஏற்படக்கூடிய எதிர்ப்பை, குறிப்பாக அரசியல் அச்சங்களை நிவர்த்தி செய்வது மிகவும் முக்கியமானது. வெளிப்படையான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதன் மூலம், பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிசெய்து, பொருளாதார உள்ளடக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டின் உணர்வை வளர்ப்பதன் மூலம், கொள்கை வகுப்பாளர்கள் சவால்களை வழிநடத்தி, முழு நாடும் இந்த முயற்சியின் பலனைப் பெறலாம். அதனைச் செய்ய இலங்கையும், இந்தியாவும் அதன் தலைமைகளும் முழுமையான அக்கறை காட்ட வேண்டும். இல்லையென்றால், இதுவும் பேச்சோடு பேச்சாக காற்றில் கலந்து மறைந்துபோய்விடும் கனவுத்திட்டமாகிவிடும்!

## கடிதங்கள்

### மூடப்பட்டுள்ளது

நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள டிக்கோயா-கிளங்கன் ஆரம்ப வைத்தியசாலையில் பல் சத்திரசிகிச்சை வைத்தியர் இல்லாத காரணத்தினால் நான்கு மாதங்களாக மூடப்பட்டுள்ளர்இ

இப்பிரதேசத்தில் உள்ள சுமார் நான்கு இலட்சம் நோயாளர்களுக்கு இந்த வைத்தியசாலை சேவைகளை வழங்கப்படுகின்றது. .

சகல வசதிகளையும் கொண்ட கிளங்கன்-டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையின் பல் சத்திரசிகிச்சை அறையில் பணியாற்றிய வைத்தியர்கள் இருவர் நான்கு மாதங்களுக்கு முன்னர் வெளிநாடு சென்றதாகவும், அதன் பின்னர் தற்காலிகமாக வைத்தியசாலையில் இணைந்த வைத்தியர் பிரசவத்திற்காக விடுமுறை எடுத்ததாகவும் பணிப்பாளர் தெரிவித்தார். நான்கு மாதங்களாக இந்த அலகு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக ஆரம்ப வைத்தியசாலையின் பல் சத்திரசிகிச்சை அறை வைத்தியர் இன்றி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அறிவித்தல் ஒன்றும் பிரிவில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. பல் சிகிச்சைப் பிரிவு மூடப்பட்டுள்ளதால் தாம் அவதிப்படுவதாகவும் பிரதேச பல் நோயாளர்கள் தெரிவித்தனர்.

ரஞ்சித் ராஜபக்ஷ



# தண்ணீர்தேசத்தில் ஒரு பயணம்



பெரியசாமி சுசாந்தனி
(கலை பீடம்
யாழ்.
பல்கலைக்கழகம்)

ஒரு வருடத்திற்கு முன்பு ஏதோ மன உளைச்சல் என்ன செய்வது என சிந்தித்த வேளை சரி புத்தகம் வாசித்தால் மன அமைதி கிடைக்கும் என்று முடிவு எடுத்து புத்தகத்தை நோக்கி பயணிக்க ஆரம்பித்தேன். புத்தகம் வாசிப்பது என முடிவெடுத்து விட்டோம். உடனே அடுத்த வினா உதித்தது. எந்த புத்தகத்தில் இருந்து நாம் ஆரம்பிப்பது? உடனே உடன்பிறப்பை நாடினேன். புத்தகம் வாசிக்க தோன்றுகிறது என் பிள்ளையார் சுழியை எந்த புத்தகத்தில் இடுவது என்று கேட்க, அவளும் கூறினாள் அடுக்கடுக்காய்... பார்த்திபன் கனவு என்றாள் கள்ளிக்காட்டு இதிகாசம் என்றாள்,கடல் புறா என்றாள் இடையில் தண்ணீர் தேசம் என்றும் கூறினாள். என் செவிகளுக்கு எட்டவில்லை மீண்டும் என்ன என்று கேட்டேன். புதில் கிடைத்தது அதான்டி வைரமுத்துவின் தண்ணீர் தேசம் என்றாள். ஏதோ ஓர் ஈர்ப்பு தண்ணீர் தேசத்தின் மீது வந்தது. தண்ணீர் தேசத்திலேயே ஆரம்பித்தேன். புத்தகம் கிடைக்கவில்லை இருந்தாலும் வலைத்தளம் எனக்கு வணக்கம் சொல்லியது. தரவிறக்கம் செய்தேன் தண்ணீர் தேசத்தை பயணம் ஆரம்பித்தது.

தண்ணீர் தேசம் புத்தகம் கடலைப் போன்று பெரிய பரப்பு ஒன்றுமில்லை சிறிய குட்டை அளவு தான் வாசிக்கத் துண்டும் சிறிய புத்தகம். புத்தகம் என்னவோ சிறியதுதான் ஆனால் கவிஞரின் வர்ணனைகளுக்கும் கற்பனைகளுக்கும் தான் எல்லை இல்லை. இதை இப்படியும் சொல்லலாமா என்பதாக கற்பனை கலந்த வர்ணனை விளையாட்டை விளையாடுகின்றார் கவிஞர் வைரமுத்து.

கவிஞர் வைரமுத்துவின் தண்ணீர் தேசம் வாசித்ததன் ஒரு விமர்சன ரீதியான அனுபவப் பகிர்வை எழுத மனம் எண்ணியது. தண்ணீர் தேசம் சுவாரஸ்யமாகத்தான் இருந்தது. அதில் ஏதும் குறை வைக்கவில்லை நாவலாசிரியர். அவ்வாறிருக்க அவரை மறக்க முடியுமா? அவர்தான் ராமசாமி வைரமுத்து. இந்தியாவின் தமிழ்நாட்டு பகுதியில் தேனீ மாவட்டத்தின் வடுகபட்டி கிராமத்தில் பிறந்தவர். தென்னிந்திய தமிழ் சினிமாவில் ஒரு சிறந்த பாடலாசிரியராக முத்திரை பதித்துள்ள இவர் அதற்கான அங்கீகாரமாய் பல விருதுகளையும் தன் வசம் கொண்டுள்ளார். 40 ஆண்டு கால திரையுலக வாழ்க்கையில் 7500 க்கு மேற்பட்ட பாடல்களையும் எழுதியுள்ளார். கவிகளுக்கு சொந்தக்காரரான கவிப்பேரரசு நாவல்கள் படைப்பதிலும் சளைத்தவர் இல்லை என்பதை இவருடைய நாவல்கள் வெளிப்படுத்துகின்றன. இவருடைய சிறப்பு பெற்ற படைப்புக்களாக வறண்ட நிலங்களின் சரித்திரமான கள்ளிக்காட்டு இதிகாசம், கருவாச்சி காவியம், மூன்றாம் உலகப்போர், தண்ணீர் தேசம் என பேனா முனையில் அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் தண்ணீர் தேசத்தின் நினைவுகள் என்னை எழுத எத்தனிக்கின்றன.

தண்ணீர் தேசம் அது ஒரு கடற்பயணம். வாசிக்கும் ஆர்வம் அதிகமாக இருந்ததனால் இரண்டு நாட்களில் வாசித்து முடித்துவிட்டேன். ஆனால் இறுதியை வாசிக்கும் போது என் மனம் ஏனோ என்னை அறியாமல் கலங்கியது. கடற்பயணம் முடிவதை எண்ணி..

கடற்பயணத்தின் கதாநாயகர்களாக தமிழ் ரோஜாவும் கலைவாணனும் மிளிர்கின்றனர். இவர்களோடு பயணித்தவர்களாய் தமிழ் ரோஜாவின் தந்தை அகத்தியர் மற்றும் கடற்பயணத்தில் மீனவர்களாய் பயணம் செய்யும் சலீம், இசக்கி,பரதன்,பாண்டி இவர்களோடு கதைக்கு உயிர் கொடுத்தது வாயில்லா பிராணி சுண்டலியோடு கதை நகர்த்திச் செல்லப்படுகிறது.

இந்த சுவாரஸ்யமான பயணத்தின் கதைச் சுருக்கத்தை நோக்கும்போது.. 1996 ஆம் ஆண்டு ஆனந்த விகடனில் தொடர்கதையாக வெளிவந்த நாவலாகும். பத்திரிகையாளரான கலைவாணனும் பணக்கார வீட்டுப் பெண்ணான தமிழ் ரோஜாவும் காதலிக்கின்றனர். கடல் என்றாலே அச்சம் கொள்ளும் பெண் தமிழ் ரோஜா. கடலையும் காதலிப்பவன் கலைவாணன். மீனவ நண்பர்களின் வேண்டுகோளின் பெயரில் தமிழ் ரோஜாவை அழைத்துக் கொண்டு கடலினால் பயணம் செய்கின்றான். மொத்தமாக ஆறு பேர் ஒரு சுண்டலியும் சேர்த்து ஏழாக கடற் பயணம் ஆரம்பிக்க ஏழோடு ஒன்றாக எட்டாவதாக நாமும் பயணிக்க திடீரென நடுக்கடலில் கப்பல் பழுதாகிவிட நங்கூரமிட்டு அங்கேயே நிற்கின்றனர். கடற்பயணம் சென்றவர்கள் கரை காண்பார்களா? அந்த ஆபத்திலிருந்து மீள்வார்களா இல்லையா? என நுணியாசனத்தில் அமர்ந்து திரைப்படம் பார்ப்பதை போல் பரபரப்பில் ஆழ்த்திய பெருமை வைரமுத்துவையே சாரும். இவ்வாறாக தண்ணீர் தேசத்தின் கதை சுருக்கம் காணப்படுகின்றது.

நாவல் வாசிக்க வேண்டும் என்ற ஆசையிலேயே எடுத்தேன். ஆனால் ஏனோ இந்த படைப்பு நாவல் போன்றல்லாமல் கவிதை வடிவில் வர்ணணை வாசகங்களால் நிரப்பப்பட்டிருந்தது. கவிஞரின் கவிப்புலத்திற்கு எல்லை இல்லை என்பதை நான் அறிந்தேன். எளிமையான மொழி நடையுடன் புத்தகத்திற்கு ஓய்வு கொடுக்காத ஒரு பயணமாகியது. ஏனோ சில நேரங்களில் ஓய்வு கொடுக்கும் போது மனம் அதை ஏற்க மறுத்ததென்றே கூற வேண்டும். 80 வீதமான கவிநடையும் 20 வீதமான நாவல் வடிவிலும் இப்படைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. நடைமுறை வாழ்வின் இயல்பான விடயங்களை இவ்வாறும் கூறலாமா? என தோன்றச் செய்த ஒரு சுவாரஸ்யமான படைப்பாக விளங்கியது.

படைப்பின் முழுவதுமாய் ஸ்ருங்கார சுவை இளையோட அதனோடு அறிவியலும் கலந்து படைப்பிற்கு மேலும் சுவையூட்டியது. இதனோடு மீனவர்களின் வாழ்க்கை வெளிப்பாடுகளும் நம்மை சிந்தனையில் ஆழ்த்துகின்றது என்றே கூறலாம் இவர்களோடு மனதளவில் கடலில் பயணம் செய்து கொண்டிருக்கும் நமக்கு உணவின் முக்கியத்துவம் நீரின் முக்கியத்துவம் என்பவற்றை இயல்பாக எடுத்துக்காட்டி இருக்கின்றார் கவிப்பேரரசு. சிக்கனம் மற்றும் பொறுமை என்பதற்கு அகராதி அர்த்தத்தை பல நிலைகளில் வெளிப்படுத்தியிருந்தார் படைப்பாசிரியர்.

எடுத்துக்காட்டாக சிக்கனம் என்பதை....'கடைசி தீக்குச்சி பற்ற வைக்கும் போது இருக்கும் கவனம் முதல் தீக்குச்சி பற்ற வைக்கும் போதே இருக்க வேண்டும்'

பொறுமை என்பதை ' நீரை கூட சல்லடையில் அள்ளலாம், அது பனிக்கட்டியாகும் வரை பொறுமை இருந்தால்'

என இயல்பு வாழ்க்கையின் வெளிப்பாடுகளை உணர்வுப்பூர்வமாக வெளிப்படுத்தி இருக்கின்றார்.

வைரமுத்துவின் லாவகமான மொழிப் பிரயோகம் நாவலுக்கு மேலும் சுவையூட்டியது என்றே கூற வேண்டும். மீனவர்களின் இயல்பான வாழ்க்கையின் கடினமான நிலைப்பாட்டை எளிமையாய் வாசகர்களுக்கு புரிய வைத்துள்ளார். மீனவர்களின் குடும்ப பிரிவு, நிரந்தரமற்ற வாழ்க்கை, கரை மீள்வோமா இல்லையா என்ற பதகளிப்பு... என்பவற்றை சூசகமாக வெளிப்படுத்தி இருக்கின்றார்.

எடுத்துக்காட்டாக ' கரை மீண்டால் இவர்கள் மீன் தின்னலாம்.. கரை மீளாவிட்டால் இவர்களை மீன் தின்னும்'

' வேட்டையாடு அல்லது ஆடப்படு இதுதான் இந்த தண்ணீரில் எழுதப்பட்ட அழியாத வாசகம்'

' சுக்கான் இரும்பில் துரு
சமைக்கும் அடுப்பில் துரு
நுட்ட கம்பியில் துரு
வசைப்படகின் விளிம்பில் துரு
இன்னும் துருப்பிடிக்காதிருப்பது
இவர்களின் எலும்பு மட்டும்தான்...'

என மீனவர்களின் கடினமான வாழ்க்கையினை நாவலின் ஊடாக அழகாக வெளிப்படுத்தியுள்ளார் நாவலாசிரியர்.

தண்ணீர் தேசம் நாவலை காதல் மொழி என்று சொல்வதா? மீனவர்களின் வாழ்க்கை மொழி என்று சொல்வதா? இல்லை அறிவியல் மொழி என்று சொல்வதா என ஓர் ஐயப்பாடு எனக்குள் உதிக்க... இது வைரமுத்துவின் அறிவியலும் வாழ்வியலும் கலந்த கவிமொழி என்பதை உணர்ந்தேன்....

தண்ணீர் தேசம் காதலோடு இணைந்து அறிவியலையும் வெளிப்படுத்தி இருக்கிறார் நீரின் விகிதாசாரம் பெர்முடாஸ் முக்கோண வளையத்தின் திகில் அனுபவங்கள், கடலில் உலா வரும் நெருப்பு பேய்கள் என அறிவியலையும் பரீட்சையமாய் பேசி இருக்கிறார் வைரமுத்து.

வாழ்க்கை என்றால் என்ன என்பதையும் சூழ்நிலைக்கேற்ப ஒரு நபர் எவ்வாறு வாழப் பழக வேண்டும் என்பதையும் தமிழ் ரோஜாவின் வாழ்க்கை நிலைப்பாட்டோடு எடுத்துக்காட்டி இருக்கிறார் படைப்பாசிரியர். அதனோடு ஒரு கடினமான சூழ்நிலையை எவ்வாறு சமாளித்து செல்ல வேண்டும் என்பதை கலைவாணன் ஊடாக கதாசிரியர் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

ஒரு கடினமான சூழ்நிலையிலும் பகிர்ந்து உண்ணும் பண்பை வெளிப்படுத்துவதை சலீம் ஊடாக வெளிக்கொணர்ந்திருந்தார்.

கப்பலில் ஏழாவது வலம் வந்த சுண்டெலிக்கு தனக்கு கிடைக்கும் ஒரு பிடி சோற்றில் அரைப்பங்கை பரிமாறி அதனையும் பாதுகாக்கிறான் சலீம். இந்நாவலில் என்னுடைய சுவாரசியமான பகுதியாக இது தென்பட்டதென்றே கூறலாம்.

இவ்வாறாக சுவாரஸ்யமாக நகரும் நாவலின் முடிவு, கடற்பயணத்தில் சிக்குண்ட ஆறு பேரும் மீள்வார்களா இல்லையா என்பதே ஆகும். வைரமுத்துவின் சுவாரஸ்யமான படைப்பு என்னுடைய சுவாரசியமான கடற்பயணம் ஆகும். இருந்தாலும் மிக விரைவாக கடற்பயணம் முடிந்து விட்டதே ஒரு வருத்தமாக இருந்தது. நேரம் கிடைக்குமாயின் நீங்களும் ஒருமுறை கடற்பயணம் சென்று வாருங்கள். தண்ணீர் தேசம் இது ஓர் அறிவியல் காதல்.







# பொறுமை காத்தல் முக்கியம்



ச.சேகர்



நாளாந்தம் பொழுது விடிவது, "குறித்த பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தினால் இத்தனை பேர் உயிரிழந்தனர், சாரதி படுகாயம், காயமடைந்தோர் அப்பகுதிக்கு அண்மையிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர், சிலரின் நிலை கவலைக்கிடம், அதள பாதாளத்தில் பேருந்து குடை சாய்ந்தது, பொலிஸார் மேலதிக விசாரணை" போன்ற துக்ககரமான செய்திகளுடனே.

இந்த விபத்துக்களுக்கு பெரும்பாலும் சாரதி மதுபோதையில் இருந்தமை, போதிய உறக்கமின்மை, வேகக் கட்டுப்பாட்டை இழந்தமை, கால்நடைகள் வீதியின் குறுக்காக ஓடியமை போன்று பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஆனாலும், நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வீதிகளில் பயணிக்கும் எத்தனை வாகனங்கள் அவற்றை தயாரித்த நிறுவனங்களினால் பரிந்துரைக்கப்பட்ட பயன்பாட்டு நிலையில் உள்ளன என்பதையும் ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டியுள்ளது.

குறிப்பாக வாகன உதிரிப்பாகங்களின் விலை கட்டுக்கடங்காத வகையில் அதிகரித்து உச்சம் தொட்டுள்ளன. சாதாரணமாக வாகனமொன்றை பராமரிப்பதற்கான செலவு (ஒயில் மாற்றம் செய்து, கிறீஸ் செய்து, முழுமையாக கழுவி, சுத்தம் செய்து கொடுப்பதற்கு, வேலையாள் கூலி அடங்கலாக) சுமார் 30,000 ரூபாய்க்கு குறையாத தொகை தேவைப்படுகின்றது. அதிலும், ஏதேனும் சிறியளவிலான உதிரிப்பாகங்கள் மாற்ற வேண்டும் என்றால் கூட, இந்தத் தொகை 40,000, 50,000 என அதிகரித்துவிடுகின்றது.

சாதாரணமாக, அனைவரும் பயன்படுத்தும் மோட்டார் சைக்கிள்களை பராமரிப்பதற்கான செலவுகூட சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த பெறுமதியை விட தற்போது இரண்டு மடங்கினால் அதிகரித்துவிட்டது.

அதுபோல, வாகன டயர், பற்றரி, வைப்பர் போன்ற அடிப்படை உதிரிப்பாகங்களின் விலைகளும் பெருமளவில் அதிகரித்துள்ளதுடன், ஒரு சில வர்த்தக நாமத் தயாரிப்புகள் மாத்திரமே சந்தையில் காணப்படுகின்றன. இறக்குமதி கட்டுப்பாட்டின் காரணமாக சந்தையில் இந்தத் தயாரிப்புகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன், விலைகளும் பெருமளவில் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இந்நிலையில், அண்மைக் காலங்களில் அதிகளவு விபத்து இடம்பெறும் வாகனங்களை எடுத்துக் கொண்டால், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் குடை சாய்வதையும், விபத்துகளை ஏற்படுத்துவதையும் காண முடிகின்றது. அத்துடன், வேன் வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களும் குறைவில்லை.

இலங்கை போக்குவரத்து சபை நஷ்டத்தில் இயங்குகின்றமை அனைவரும் அறிந்த விடயமாகும். இந்நிலையில், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் முன்னரைப் போன்று தற்போதும் முறையான பராமரிப்புகளுக்கு உட்படுத்தப்படுகின்றனவா, அவற்றில் பணிபுரியும் சாரதிகள் முன்பிருந்தவர்களைப் போன்று கடுமையான தேர்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனரா? பெரும்பாலான தூர பிரதேசங்களுக்கு பயணிக்கும் தனியார் பேருந்து சாரதிகள் மற்றும் வழிநடத்துனர்களைப் போன்று, போதையில் பேருந்து செலுத்துகின்றனரா என்பதை பரிசோதிப்பதற்கு உரிய பொறிமுறைகள் காணப்பட வேண்டும்.

அதுபோலவே, தூரப் பயணங்களை மேற்கொள்ளும் போது ஆங்காங்கே வீதி பாதுகாப்பு பொலிஸார் கடமையில் ஈடுபட்டு, வீதி விதிமுறைகளை மீறுவோருக்கு தண்டம் வழங்குவதையும் அவதானிக்க முடியும். ஆனாலும், இந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளுக்கு பொலிஸார் அவ்வாறு தண்டம் வழங்குவதை அவதானிக்க முடிவதில்லை. இரு தரப்பினரும் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளமை இதற்கு காரணமாக அமைந்திருக்குமோ என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நாட்டினுள் தனிப்பட்ட தேவைகளுக்கு பயன்படுத்தக்கூடிய புதிய வாகனங்கள் இறக்குமதி செய்யப்படாத நிலையில், அண்மையில் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடு நீக்கம் தொடர்பான அறிவித்தலில், வாகன உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதற்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது வரவேற்கத் தக்க விடயமாக அமைந்துள்ளது.

எவ்வாறாயினும், இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் வாகன உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கு வாகனத்தை பயன்படுத்துவோரிடம் போதியளவு பணம் இருக்குமா என்ற கேள்வியும் இல்லாமல் இல்லை. முன்பு சுமார் 4000 ரூபாய்க்கு விற்பனையாகிய ஸ்கூட்டர் டயர், தற்போது 10000 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றது.

கார் மற்றும் வேன்களின் உதிரிப்பாகங்களின் விலையும் இவ்வாறே அதிகரித்துள்ளன. ஆனாலும், பொது மக்களின் அன்றாட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்து காணப்படும் நிலையில், வாகனங்களில் எழும் தேய்மானத்தை இயலுமானவரை சீர் செய்து மேலும் சிறிது காலம் பயன்படுத்துவது பற்றியே பெரும்பாலானவர்கள் சிந்திப்பதுண்டு. இவ்வாறான சிந்தனைத் தீர்மானமும், வாகன விபத்துகள் இடம்பெறுவதற்கு காரணமாக அமைந்துவிடுகின்றன.

பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக அனைவரும் துரிதமாக தமக்கு வருமானத்தை தேடி, தமது தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதில் அதிகளவு அக்கறை காண்பிக்கின்றனர். இதனால், ஒரு சவாரியை துரிதமாக முடித்துவிட்டு, அடுத்த சவாரியை மேற்கொள்ள வேண்டும் என்பதில் முனைப்பாக உள்ளனர். இதனால் வீதிகளில் அதிக வேகமான வாகன செலுத்துகைகளிலும் ஈடுபடுகின்றனர். வாகன செலுத்துகைக்கு அவசியமான அடிப்படை பண்புகளில் ஒன்றாக பொறுமை காத்தல் என்பதும் எல்லை கடந்து விட்டது போல் தோன்றுகின்றது.

வீதிகளில் விதிமுறைகளை மீறுவதை கண்காணிப்பில் ஈடுபடும் பொலிஸாரினால் மாத்திரம் இந்த விபத்துகள் ஏற்படுவதை தவிர்த்துவிட முடியாது. வாகனத்தை வீதியில் இறக்கும் முன்னர் அவற்றின் நிலை, தமது சொந்த நிலை, ஏனையவர்களைப் பற்றி சிந்தித்து, வீதி விதிகளை பின்பற்றி பயணம் செய்வதால், பாதுகாப்பாக செல்ல வேண்டிய இடத்தை சென்றடைய முடியும். பொறுமை காத்தல் முக்கியமானதாகும்.

சென்னை

சென்னை பல்கலைக்கழகத்துக்கு

# குடியரசுத் தலைவர் புகழாரம்



"சென்னை பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகளில், ஒரு லட்சத்து 85 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவ, மாணவியர் படித்து வருகின்றனர். பாலின சமத்துவத்தின் அடையாளமாக சென்னைப் பல்கலைக்கழகம் திகழ்கிறது. சென்னைப் பல்கலைக்கழகம் கல்வியை மேம்படுத்துவதில், இந்தியாவுக்கு பெருமை சேர்த்து வருகிறது" என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் 165வது பட்டமளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை (06) நடைபெற்றது. இந்த விழாவில், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு கலந்துகொண்டு மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். பின்னர், அவர் பேசியது:

"சென்னைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டதில் மகிழ்ச்சி. பதக்கங்கள் மற்றும் பட்டங்களை பெற்றவர்களுக்கும், பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பல்வேறு துறைகளின் பேராசிரியர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழின் சங்க இலக்கியங்கள் இந்தியாவுக்கு மிகப்பெரிய பொக்கிஷம். திருக்குறள் அறிவுக்களஞ்சியமாக இருந்து வருகிறது. தமிழகத்தில் உள்ள கோயில்களும், சிற்பங்களும் தமிழகத்தின் கலை சிறப்பினை விவரிக்கின்றன. கலை, இலக்கியம் என கலாசாரம் நிறைந்த மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்றார்.

பாகிஸ்தான்

# 'வீட்டில் அமைதியாக இருக்க வேண்டாம்'

## இம்ரான்கான் அழைப்பு



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான், பிரதமராக இருந்த காலத்தில் வெளிநாட்டு தலைவர்கள் மற்றும் பிரமுகர்களிடமிருந்து பெற்ற பரிசுகளை அரசிடம் ஒப்படைக்காமல் விற்று சொத்து சேர்த்து ஊழலில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதனிடையே, இந்த ஊழல் வழக்கு தொடர்பான வழக்கு இஸ்லாமாபாத் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் இம்ரான்கான் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும், அவருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தது. இதையடுத்து, இம்ரான்கானை பொலிஸார் வீடுபுகுந்து கைது செய்தனர். அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில், வீதிகளில் இறங்கி போராடும்படி ஆதரவாளர்களுக்கு இம்ரான்கான் அழைப்பு விடுத்துள்ளார். கைது நடவடிக்கைக்கு முன்னதாக இம்ரான்கான் பேசிய வீடியோ தற்போது சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது.

அந்த வீடியோவில் இம்ரான்கான் கூறுகையில், "என் பாகிஸ்தானியர்களே இந்த தகவல் உங்களை அடையும்போது நான் சிறை சென்றிருப்பேன். நீங்கள் வீட்டில் அமைதியாக இருக்கவேண்டாம் என்பதே என் ஒரே வேண்டுகோள். நான் கடினமான சூழ்நிலையை சந்திப்பது எனக்காக அல்ல, உங்களுக்காகத்தான், உங்கள் தலைமுறைக்காத்தான். உங்கள் உரிமைக்காக நீங்கள் போராடாமல் அடிமை வாழ்க்கை வாழ்ந்தால் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் அடிமைகளுக்கு என்று சொந்த வாழ்க்கை இல்லை. அடிமைகள் நிலத்தில் உள்ள எறும்பு போன்றது. அவைகள் அதிக உயரத்தை எட்டாது. இது நீதிக்கான, உங்கள் உரிமைக்கான, சுதந்திரத்திற்கான போராட்டம். சுதந்திரத்தை யாரும் உங்கள் தட்டில் வைக்கமாட்டார்கள். உங்கள் உரிமையை பெறும்வரை நீங்கள் தொடர்ந்து போராடுங்கள், தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் அரசு உங்களின் மிகப்பெரிய அடிப்படை உரிமையாகும்" என்றார்.

சென்னை


# கை அகற்றப்பட்ட குழந்தை மரணம்

பக்டீரியா தொற்றால் ரத்தத்தில் நச்சுகள் கலந்ததால் ஏற்பட்ட பாதிப்பால், கை அகற்றப்பட்ட நிலையில் எழும்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஒன்றரை வயது ஆண் குழந்தை உயிரிழந்ததாக எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை விளக்கம் அளித்துள்ளது.

"ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்றரை வயது குழந்தை முகமது மகிர், குறை பிரசவத்தில் 1.5 கிலோ கிராம் எடையுடன் 32 வாரத்தில் பிறந்துள்ளது. அந்த குழந்தைக்கு தீவிர Hydrocephalus என்ற மூளையில் நீர்கசிவு கோளாறு இருந்தது.

இந்த நீர் கசிவை உறிஞ்சி எடுப்பதற்காக, 5 மாத காலமாக VP Shunt என்ற சிகிச்சை வழங்கப்பட்டது. மேலும், தீவிர ஊட்டச்சத்து குறைபாடு, வளர்திறன் குறைபாடு கொண்ட அந்த குழந்தைக்கு, நீர் கசிவை உறிஞ்சுவதற்காக பொருத்தப்பட்டிருந்த VP Shunt ஆசனவாய் வழியாக வெளியேறிய காரணத்தால், குழந்தையின் உடல்நிலை தொடர்ந்து பாதிக்கப்பட்டு வந்தது. இதனால் ஏற்பட்ட பக்டீரியா தொற்றினால், குழந்தையின் ரத்தத்தில் நச்சுக்கள் கலந்ததால் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டது. இந்த நிலையில் மருத்துவர்கள் வழங்கிய சிகிச்சை பலனின்றி அந்த குழந்தை உயிரிழந்துள்ளது" என்றும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

# )நிலவின் வட்டப் பாதைக்குள் சந்திரயான்- 3




ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து கடந்த ஜூலை 14ம் திகதி சந்திரயான் 3 விண்கலம் புறப்பட்டது.

இந்நிலையில், புவி வட்டப் பாதையில் இருந்து நிலவின் சுற்றுவட்டப் பாதைக்குள் சந்திரயான் 3 விண்கலம் நுழைந்தது. புவியை சுற்றி வந்த விண்கலம், நிலவை சுற்றத் தொடங்கியது. சந்திரயான்- 3 இம்மாத இறுதிக்குள் நிலவில் தரையிறங்கும் என இஸ்ரோ விஞ்ஞானிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

சந்திரயான்- 3 செயல்பாடுகள் குறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். மேலும் இம்மாத இறுதியில் நிலவை சென்றடையும் என இஸ்ரோ ஏற்கனவே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.



# ஸ்கூட்டரை தலைகீழாக ஓட்டி சென்ற இளைஞன்

சமூக வலைதளங்களில் வைரலாகி வரும் ஒரு வீடியோவில் இளைஞன் ஒருவர் தனது ஸ்கூட்டரில் வழக்கத்திற்கு மாறான முறையில் ஓட்டுவது போன்ற காட்சிகள் உள்ளன.


இந்தோனேசியாவை சேர்ந்த அராப் அப்துர்ரஹ்மான் என்ற அந்த வாலிபர் தனது ஸ்கூட்டி வாகனத்தில் வடிவமைப்பை மாற்றி சாலையில் ஓட்டி சென்றுள்ளார்.

அதாவது ஸ்கூட்டரை சாலையில் ஓட்டி செல்லும் போது அந்த ஸ்கூட்டர் ரிவர்சில் செல்வது போல தோற்றமளிக்கும். அந்த வகையில் தனது ஸ்கூட்டரை அப்படியே மாற்றி வடிவமைத்து சாலையில் ஓட்டி சென்றுள்ளார்.

அவரது ஸ்கூட்டியின் சைலன்சர் முன்பக்கம் இருக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஸ்கூட்டரில் இவர் சீட்டிற்கும், ஹேன்டில் பாருக்கும் இடையில் உள்ள இடத்தில் அமர்ந்த படி காலை அதற்கென பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் வைத்து வாகனத்தை ஓட்டி உள்ளார். பார்ப்பதற்கு வித்தியாசமாக இருந்தாலும், சாலையில் செல்லும் போது மற்ற பயணிகளுக்கு குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது. இதை சக பயணி ஒருவர் செல்போனில் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட அது வைரலாகி வருகிறது.

நியூயோர்க்

# 10 யுவதிகளை திருமணம் செய்த இளைஞன்



அமெரிக்காவின் நியூயோர்க் நகரைச் சேர்ந்த 28 வயதான வர் லஸ்டின் இமானுவேல் 10 இளம் பெண்களை ஜூலை 31ம் திகதி ஒரே நேரத்தில் திருமணம் செய்து கொண்டார். இந்த திருமண விழாவை லஸ்டின் கடற்கரையில் கொண்டாடினார்இ

து தொடர்பான வீடியோவை சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ள இமானுவேல், "இன்று நான் பத்து பெண்களை மணந்தேன்.. அனைவரும் என் மனைவிகள்" என்ற தலைப்பில் வீடியோவைப் பகிர்ந்துள்ளார். ஒன்பது வினாடிகள் கொண்ட இந்த வீடியோவில் ஒன்பது மணப்பெண்கள் தங்கள் மாப்பிள்ளையை சுற்றி வருவது இடம்பெற்றுள்ளது. அந்த பெண்கள் கவர்ச்சியாக, குட்டையான, வெள்ளை ஆடைகளை அணிந்துள்ளனர். கையில் பூங்கொத்து வைத்து உள்ளனர். ஒரு மணமகள் லஸ்டினின் மடியில் அமர்ந்திருப்பதைக் காணலாம்.

லஸ்டின் சமூக வலைதளங்களில் மிகவும் பிரபலமானவர். மேலும் பெண்களுக்கு மசாஜ் செய்பவர் ஆவார். இவருக்கு டிக்டாக்கில் அதிக பின்தொடர்வோர் உள்ளனர். அவர் வெளியிட்டு உள்ள திருமண வீடியோவுக்கு 5,81,000-க்கும் மேற்பட்டோர் பார்த்துள்ளனர். அவரது சமூக வலைதளத்தில் பல ஆபாசமான படங்கள் மற்றும் வீடியோக்கள் இடம்பெற்று உள்ளன.

எல்.பி.எல்:

# ஜ:.ப்னா கிங்ஸை வீழ்த்திய பி-லவ் கண்டி



இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான லங்கா பிறீமியர் லீக் (எல்.பி.எல்) தொடரில், பல்லேகலவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நடப்புச் சம்பியன்கள் ஜஃப்னா கிங்ஸ் உடனான போட்டியில் பி-லவ் கண்டி வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கண்டி

கிங்ஸ்: 117/9 (20 ஓவ. )

(துடுப்பாட்டம்: டுனித் வெல்லலாகே ஆ.இ 38 (27) ஓட்டங்கள். பந்துவீச்சு: வனிடு ஹஸரங்க 3/9 [4], நுவான் பிரதீப் 3/36 [4], அஞ்சலோ மத்தியூஸ் 2/8 [2], இசுரு உதான 1/17 [2], துஷ்மந்த சமீர 0/23 [4], முஜீப் உர் ரஹ்மான் 0/23 [4])

கண்டி: 118/2 (13 ஓவ. )

(துடுப்பாட்டம்: வனிடு ஹஸரங்க ஆ.இ 52 (22), பக்கர் ஸமன் 42 (39) ஓட்டங்கள். பந்துவீச்சு: நன்ட்ரே பேர்கர் 1/17 [2], மகேஷ் தீக்ஷன 1/35 [4], நுவான் துஷார 0/12 [2], திஸர பெரேரா 0/23 [3])

போட்டியின் நாயகன்: வனிடு ஹஸரங்க

முன்னதாக நடைபெற்ற கொழும்பு ஸ்ரைக்கர்ஸுடனான போட்டியில் தம்புள்ள ஓறா வென்றது.


இந்நிலையில், இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கோல் டைட்டான்ஸை ஸ்ரைக்கர்ஸ் எதிர்கொள்ளவுள்ளதுடன், இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கிங்ஸை ஓறா எதிர்கொள்ளவுள்ளது.

# சம்பியனான அனிக்கா நிம்சாத்

■ எம்.யூ.எம். சனூண்



புத்தளம் மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற சதுரங்க சமர் ஆறு வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டியில் பெருக்குவட்டான் அல் மின்ஹாஜ் முஸ்லிம் வித்தியாலயத்தில் முதலாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவி அனிக்கா நிம்சாத் சம்பியனாகியுள்ளார்.



ஆர்.பி லெய்ப்ஸிக்கிலிருந்து

# கவிரோலைக் கைச்சாத்திட்ட மன்செஸ்டர் சிற்றி

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான ஆர்.பி லெய்ப்ஸிக்கிலிருந்து 90 மில்லியன் யூரோக்களுக்கு பின்களவீரரான ஜொஸ்கோ கவிராலைக் கைச்சாத்திடுவதை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி பூர்த்தி செய்துள்ளது.

# விரைவில் மர்ஹூம் இக்பால் ஞாபகார்த்த கால்பந்தாட்டத் தொடர்

■ பாறுக் ஷிஹான்

மர்ஹூம் இக்பால் ஞாபகார்த்த கால்பந்தாட்ட கிண்ணத் தொடரானது மிக விரைவில் ஆரம்பமாகவுள்ளதாக கல்முனை சனிமௌண்ட் விளையாட்டுக் கழக ஸ்தாபகரும், அம்பாறை கால்பந்தாட்ட சங்கத்தின் பொதுசெயலாளருமான எம்.எச். எம். அப்துல் மனாப் தெரிவித்தார்.

கல்முனை சந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தில் விரைவில் கல்முனை சனிமௌன்ட் விளையாட்டுக்கழக அனுசரணையில் நடைபெறவுள்ள குறித்த தொடர்பில் அண்மையில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே மனாப் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் மனாப் கருத்துத் தெரிவிக்கையில்,

"அம்பாறை மாவட்ட கால்பந்தாட்ட சம்மேளனத்தால் 2023 ஆண்டு மர்ஹூம் இக்பால் ஞாபகார்த்த உதைப்பந்தாட்ட கிண்ண சுற்றுப் போட்டியானது சிறப்பாக நடாத்தப்படவுள்ளது. எமது சனிமௌன்ட் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் உப தலைவர்களில் ஒருவரும் சிறந்த விளையாட்டு வீரரும் கிழக்கு மாகாண அணியில் தேசிய ரீதியில் இடம்பெற்ற வீரருமான மர்ஹூம் எம்.ஐ.எம் இக்பால் எம்மை விட்டு பிரிந்து 22 ஆண்டுகள் நிறைவடைவதை நினைவு கூறும் முகமாக கல்முனை சந்தான்கேணி விளையாட்டு மைதானத்தில் சுற்றுப்போட்டி ஒன்றை இரவு மின்னொளியில் நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

இதில் மட்டக்களப்பு உதைப்பந்தாட்ட சங்கத்தை சேர்ந்த 3 அணிகளும் காத்தான்குடி உதைப்பந்தாட்ட லீக்கினை சேர்ந்த 2 அணிகளும் அம்பாறை மாவட்ட உதைப்பந்தாட்ட லீக்கினை பிரதிநிதித்துவப்படுத்தி 12 ஏ கழகங்களும் அக்கரைப்பற்று உதைப்பந்தாட்ட லீக்கினை சேர்ந்த 5 அணிகளுமாக மொத்தமாக 22 அணிகள் இச்சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ளவுள்ளன.



கைக்காவல மத்திய கல்லூரியை

# வென்ற மாத்தளை சாஹிராக் கல்லூரி

■ அஸ்ஹர் இப்றாஹிம்

கைக்காவல மத்திய கல்லூரிக்கெதிரான போட்டியில் மாத்தளை சாஹிராக் கல்லூரி வென்றது.

சாஹிராக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற குறித்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அக்கல்லூரி 44 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 129 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு 130 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கைக்காவல மத்திய கல்லூரி 25.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 106 ஓட்டங்களையே பெற்று 23 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 07 ஓகஸ்ட் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.